BOOK-POST

GML

# வணக்கம் ரோட்டரி

VANAKKAMM ROTARY - DISTRICT 2982

மாவட்டம் 2982

தமிழ் மாத இதழ்

| மலர் – 1 | இதழ் – 7 | ஜனவரி 2026 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ. 10/– |
|---|---|---|---|---|
| Volume - 1 | Issue - 7 | January 2026 | Tamil Monthly | Price : Rs. 10 |



Rotary

TEAM UNIQUE 2025-26

தனித்துவமாக தன்னலமற்ற

# ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

## இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு

**மாரடைப்புக்கான நவீன பைபாஸ் அறுவை சிகிச்சைகள்**
(Beating Heart Bypass Surgeries)



**இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சைகள்**
(Valve Repair, Replacement Surgeries)



**சிக்கலான இருதய அறுவை சிகிச்சைகள்**
(Complicated Heart Surgeries, Re Do Surgeries)



**மகாதமனி சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சைகள்**
(Aortic Dissection, Aneurysmal Surgeries)

**எக்மோ (ECMO) வசதிகளை கொண்ட இருதய தீவிர சிகிச்சைப் பிரிவு**

**முழு நேரமும் செயல்படும் அவசர சிகிச்சைப் பிரிவு**

---

**ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை**

202, பெங்களூர் பை-பாஸ் ரோடு, சேலம் - 636 004. Ph: 0427-2338800

# பிரதியினுள்....





**06** Star Project



**21** எனது நூலகம்



**09** Rc Salem Divine Hearts Charter Installation



**22** RI President-ஆக பொறுப்பேற்கும் இரண்டாவது ஆப்பிரிக்கர் ஓலாயின்கா ஹகீம் பாபலோலா



**11** அழகோவியம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு!



**24** சங்க திட்டங்கள்



**19** குறுக்கு எழுத்துப் போட்டி




**28** கேள்வி களஞ்சியம்



# வணக்கம் ரோட்டரி



அன்புள்ள ரோட்டரி நண்பர்களுக்கு,

ஒவ்வொரு ரோட்டரி கூட்டமும், ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு நண்பகிர்வு தருணமும் நம்மை நம்மைவிட பெரிய ஒன்றின் அங்கமாக இருப்பதை நினைவூட்டுகிறது. உலகம் மாறலாம் என்று நம்பும் உலகளாவிய குடும்பத்தின் ஒரு பகுதியாக நாம் இருக்கிறோம்.

சில நேரங்களில் நம்மில் யாரோ ஒருவர் "என் சிறிய பங்களிப்பு உண்மையில் வித்தியாசம் உண்டாக்குமா?" என்று யோசிக்கலாம். பதில் – ஆம். சுகாதார முகாமில் ஒரு சிரிப்பு, சுத்தமான குடிநீருக்கான ஒரு நன்கொடை, ஒரு இளம் மாணவனை வழிநடத்துதல் – இவை எல்லாம் வெறும் செயல்கள் அல்ல; அவை நம்பிக்கையின் தீப்பொறிகள். அந்த தீப்பொறிகள் ஒன்று சேர்ந்தால், சமூகங்களை ஒளிரச் செய்யும் விளக்காக மாறுகின்றன.

ரோட்டரியின் வலிமை எப்போதும் அதன் மனிதர்களில்தான் இருக்கிறது – சாதாரண மனிதர்கள், ஒற்றுமையின் மூலம் அசாதாரண முடிவுகளை உருவாக்குகிறார்கள். உலகம் நம்மை நம்முடைய பதவிகளுக்காக நினைவில் கொள்ளாது, ஆனால் நாம் தொடும் உயிர்களுக்காக நினைவில் கொள்கிறது. ஒவ்வொரு ரோட்டேரியரும் துயரத்தை நம்பிக்கையாக, இருளை வெளிச்சமாக, சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் திறன் கொண்டவர்கள்.

சேவை என்பது ஒரு கடமை அல்ல, அது ஒரு சிறப்புரிமை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ரொட்டேரியராக இருப்பது என்பது, எங்கு சென்றாலும் நம்பிக்கையை எடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்கிறோம் என்பதே. நம்முடைய பினை வெறும் அடையாளமாக அல்ல, யாரோ ஒருவர், எங்கோ ஒருவர், ரோட்டரியின் உதவிக்கரம் காத்திருக்கிறார் என்பதை தினசரி நினைவூட்டலாக அணிய வேண்டும்.

அன்பான நண்பர்களே, நாம் தொடர்ந்து பெரிய கனவுகள் காண்போம், துணிவுடன் செயல்படுவோம், முழு மனதுடன் சேவை செய்வோம். உலகம் இன்று ரோட்டரியை அதிகம் தேடுகிறது. அதே சமயம் , நமது ஒவ்வொரு சிறு முயற்சியும் அந்தத் தேடலுக்கான விடையாக அமைகிறது. நாம் விதைக்கும் ஒவ்வொரு நற்செயலும், எதிர்காலத்தில் ஒரு பெரும் மாற்றத்தின் அறுவடையாக மாறும் என்பதில் ஐயமில்லை.

நண்பர்களே, தனித்தனியாக நாம் வெறும் துளிகள், ஆனால் ஒன்றாக இணைந்தால் நாம் ஒரு பேராழி. நம்மிடம் உள்ள அன்பு, ஆற்றல் மற்றும் சேவை மனப்பான்மையைக் கொண்டு, இந்த உலகை இன்னும் சற்று அழகான இடமாக மாற்றுவோம்.

வாருங்கள், "தன்னலமற்ற சேவை" **(Service Above Self)** எனும் நமது தாரக மந்திரத்தை வாழ்ந்து காட்டுவோம். நமது பயணம் தொடரட்டும், மாற்றங்கள் மலரட்டும்!

நல்லதே நினைப்போம், நல்லதே பேசுவோம், நல்லதே செய்வோம்...

ரோட்டரி சேவையில்,

**Rtn. Hemanath**

**GML Editor**



# ரோட்டரி பன்னாட்டு தலைவரின் செய்தி

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணம் , சாலினாஸ் நகரின் புறநகரில் உள்ள ஒரு கேரேஜில், பழமையான கார்களை பழுதுபார்த்து புதுப்பிக்கும் பயிற்சியை இளைஞர்கள் கற்றுக்கொண்டு வருகின்றனர். ஆனால் அவர்கள் வெறும் தொழில்நுட்ப திறனை மட்டுமல்ல, தங்களின் எதிர்காலத்தையும் மீட்டெடுத்து வருகின்றனர். இந்தப் பயிற்சி திட்டம் அவர்களுக்கு வழிகாட்டுதலை வழங்குகிறது; சிலருக்கு இது நெருக்கடி வாழ்க்கையிலிருந்து விலகி, அர்த்தமுள்ள வேலைவாய்ப்பை நோக்கிச் செல்லும் ஒரு புதிய பாதையாக அமைகிறது. பயிற்சி முடித்தவர்கள் சான்றிதழ்கள், நடைமுறை அனுபவம் மற்றும் நம்பிக்கையுடன் வெளியேறுகின்றனர்.

ஒவ்வொரு ஜனவரியிலும் ரோட்டரி கொண்டாடும் தொழில் சேவை மாதம் **(Vocational Service Month)** என்பதன் உண்மையான அர்த்தம் இதுவே. நேர்மை **(Integrity)** என்பது நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அது பிரதிபலிக்க வேண்டும் என்பதை இது நினைவூட்டுகிறது.

இந்த கலிஃபோர்னியா மாநிலத்தின் வாகன பழுது மற்றும் புதுப்பிப்பு திட்டம் இவ்வளவு வெற்றிபெற்றதற்குக் காரணம், அது முழுமையாக நேர்மையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான். **Carmel-by-the-Sea** ரோட்டரி சங்க உறுப்பினர்கள், சமூகத்துக்கு என்ன தேவை என்பதை தாங்கள் அறிவதாக கருதவில்லை. அவர்கள் மக்களின் குரலைக் கேட்கிறார்கள். திறமையான மெக்கானிக்குகள் பற்றாக்குறை இருப்பதும், அதே நேரத்தில் வேலைத் திறன் இல்லாத பல இளைஞர்கள் இருப்பதும் தெரியவந்தது. தொழில்நுட்ப திறன் மட்டுமே போதாது என்பதை உணர்ந்த அவர்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகளுடன் தொழில் பயிற்சியையும் வழங்கும் **Rancho Cielo** என்ற இலாப நோக்கற்ற அமைப்புடன் கை கொத்தனார்.

இதுவே நான்கு வழி சோதனை **(The Four-Way Test)** நடைமுறையில் செயல்படுகிறது. அந்த நான்கு எளிய கேள்விகள் உண்மையான, பயனுள்ள சேவையை நோக்கி நம்மை வழிநடத்துவதற்காக உள்ளன.

போலியோ நோயை முற்றிலும் ஒழிக்கும் நமது உறுதிப்பாட்டை நினைத்துப் பாருங்கள். கடந்த நாற்பது ஆண்டுகளாக, உலகின் குழந்தைகளுக்கு இந்த நோயை முற்றிலும் ஒழிப்போம் என்று நாம் வாக்குறுதி அளித்து வருகிறோம். பல தடைகள் இருந்தாலும், நாம் விடாமுயற்சியுடன் தொடர்ந்து செயல்படுகிறோம்; இன்று அந்த வைரஸை முறியடிக்கும் தருணத்திற்கு மிக அருகில் இருக்கிறோம். இந்த வாக்குறுதியை காப்பாற்றுவதுதான் நேர்மையின் உண்மையான அர்த்தம்.

அதே நேர்மைதான் நமது தொழில் சேவையையும் வழிநடத்த வேண்டும். வரவிருக்கும் ஒரு தசாப்தத்தில், வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் 1.2 பில்லியன் இளைஞர்கள் வேலைவாய்ப்பு வயதைக் கடக்க உள்ளனர்; ஆனால் எதிர்பார்க்கப்படும் வேலைகள் வெறும் 420 மில்லியன் மட்டுமே. இது ஒரு பெரும் இடைவெளியை உருவாக்குகிறது. நீண்ட காலமாக பொருளாதார வாய்ப்புகளிலிருந்து விலக்கப்பட்ட சமூகங்களுக்கு நமது ஆதரவு அவசியம்.

ஆனால் ஆதரவு என்றால் நமது விருப்பங்களை திணிப்பது அல்ல. உள்ளூர் தேவைகளை கவனமாகக் கேட்பது, உறுதியான கூட்டாண்மைகளை உருவாக்குவது, சமூகங்கள் தாமே தொடர்ந்து நடத்தக்கூடிய திட்டங்களை வடிவமைப்பது என்பதே அதன் உண்மையான அர்த்தம்.

வாழ்க்கையை மாற்றக்கூடிய அறிவும் அனுபவமும் உங்களிடம் உள்ளது. நீங்கள் எந்தத் தொழிலில் இருந்தாலும், உங்கள் திறன்கள் ரோட்டரியின் மதிப்புகளுடன் இணையும் போது, அது நீடித்த மாற்றங்களை உருவாக்கும். உங்களிடம் கொடுக்க எதுவும் உள்ளதா என்பதே கேள்வி அல்ல; உங்கள் திறன்களை எவ்வாறு சேவைக்காக பயன்படுத்தப் போகிறீர்கள் என்பதே முக்கியம்.

இந்த ஜனவரியில், உங்கள் சங்கம் உங்கள் சமூகத்தில் உள்ள தொழில் சார்ந்த தேவைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்று சிந்தியுங்கள். உங்கள் உறுப்பினர்களிடம் உள்ள எந்த திறன்கள் ஒருவரின் வாழ்க்கையை மாற்றக்கூடும்? உங்கள் தொடர்புகள் இளைஞர்களுக்கான வாய்ப்புகளின் கதவுகளை எவ்வாறு திறக்க முடியும்? எந்த கூட்டாண்மைகள் நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்?

நேர்மை உங்களை வழிநடத்தட்டும். நான்கு வழி சோதனை உங்கள் பாதையை ஒளிரச் செய்யட்டும். கலிஃபோர்னியாவில் உள்ள அந்த இளைஞர்களும், உலகம் முழுவதும் வேலைத் திறன்கள் தேவைப்படும் எண்ணற்ற இளைஞர்களும், தொழில் சேவை ஏன் முக்கியம் என்பதை எப்போதும் நமக்கு நினைவூட்டட்டும்.

நமது தொழில்முறை திறன்களை மனிதகுல சேவைக்காக பயன்படுத்துவதை, ஒவ்வொரு செயலில் நேர்மையை இதயமாகக் கொண்டு, மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்.

நன்றியுடனும் அன்புடனும்,

**Francesco Arezzo**
President, Rotary International, 2025-26

# மாவட்ட ஆளுநர் செய்தி



எனது அருமை UNIQUEZ TEAM சங்க தலைவர்களே, செயலாளர்களே, உதவி ஆளுநர்களே, மாவட்ட, மண்டல பொறுப்பாளர்களே...

உங்கள் அனைவருக்கும் எனது இனிய அன்பான, பணிவான வணக்கங்கள். கடந்த மாதம் நமது மாவட்டத்திற்கு மிகப்பெரிய அனுபவம் மிக்க, ஆற்றல்மிக்க, ஊக்கப்பூர்வமான பல்வேறு நிகழ்வுகளை நடத்திக் காட்டிய மாதமாக அமைந்தது. உள்ளபடியே, அனைத்து சங்கங்களும் நமது மாவட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, முதன்மையான செயல் திட்டங்களை - உதாரணமாக மருத்துவ முகாம்கள், விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வுகள், பணி நிமித்தமான கலந்தாய்வு முகாம்கள், முத்தாய்ப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்தியேக ரோட்டரி சங்கத்திற்கான பட்டயம் வழங்கும் நிகழ்வு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சுயம்வரம் நிகழ்வின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மணமக்கள் ஜோடிகளுக்கு நடத்தப்பட்ட திருமண நிகழ்வு. இது மட்டுமா, நமது மாவட்ட உறுப்பினர்கள் மட்டுமன்றி, மற்ற மாவட்ட உறுப்பினர்களும் ஆவலோடு எதிர்பார்த்த நமது மாவட்ட மாநாடு "அழகோவியம் " அரங்கேறிய நிகழ்வு. உள்ளபடியே நமது சேலம் எலைட் ரோட்டரி சங்க உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, நமது மாவட்ட வரலாற்றில், ஒன்பது மாற்றுத் திறனாளி ஜோடிகளுக்கு திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டிய சங்க தலைவர் Rtn. மகேஷ் அவர்களுக்கும், சங்க உறுப்பினர்களுக்கும் எனது உள்ளபூர்வமான, மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, சேலம் ஜிம்கானா ரோட்டரி சங்கத்தின் வாயிலாக, இந்தியாவிலேயே இரண்டாவது சங்கமான, மாற்றுத் திறனாளிகளுக்கான, மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படுகின்ற சேலம் டிவைன் ஹார்ட்ஸ்ரோட்டரி சங்கத்தை உருவாக்கி, வழிநடத்துகின்ற சேலம் ஜிம்கானா ரோட்டரி சங்கத்தின் தலைவர் Rtn. காமராஜ் பிள்ளை அவர்களுக்கும், அவர்களது சங்க உறுப்பினர்களுக்கும், புதிதாக இணைந்துள்ள சேலம் டிவைன் ஹார்ட்ஸ் சங்க உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மாவட்டம் முழுவதும் பல்வேறு செயல் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்க கூடிய சங்க தலைவர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரு நிகழ்வுகளுக்கும் சிறப்பு விருந்தினராக நம்மோடு கலந்து கொண்டு நம்மனைவரையும் மிக மிக ஊக்கம் உள்ள வார்த்தைகளை கொண்டு, உற்சாகப்படுத்திய நமது **Zone 4 & 6** மண்டலத்தின் **RI Director Rtn. Er. Muruganandham @ MMM** அவர்களுக்கு நம் மாவட்டத்தினுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்பார்ப்பு என்பது அனைவருக்குமே இருக்கக்கூடிய ஒன்று. அந்த எதிர்பார்ப்பின் வாயிலாக ஒரு நிகழ்விற்கு கொஞ்சமும் தொய்வில்லாமல், பங்கு கொள்ளும் உறுப்பினர்களுக்கு எந்த ஒரு குறையும் இல்லாமல், அந்த நிகழ்வினை நடத்துவது என்பது மிக மிக சவாலான ஒன்று. நமது மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஆவலோடு, மிகுந்த எதிர்பார்ப்போடு எதிர்கொண்ட நிகழ்வு தான் நமது மாவட்ட மாநாடு "அழகோவியம்". இந்த மாநாடு, ஒவ்வொருவருடைய ஆழ்மனதையும், அழியாத, அழகான, ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்றால் அது மிகையல்ல.

அப்படிப்பட்ட நமது மாவட்ட மாநாட்டின் தலைவர் **Rtn.** மின்னல் கந்தசாமி, செயலாளர் **Rtn. Dr.** மதன் கார்த்திக் மற்றும் அனைத்து மாவட்ட மாநாட்டு பொறுப்பாளர்களுக்கும் எனது உள்ளம் கனிந்த, பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாநாட்டின் வெற்றி, அதில் கலந்து கொண்ட உறுப்பினர்களுடைய பேச்சில் இருக்கும். அப்படிப்பட்ட பேச்சில், மாநாட்டினுடைய பல்வேறு விஷயங்கள் அலசப்படும், ஆராயப்படும். ஒவ்வொருவருடைய பார்வையிலும் ஒவ்வொரு விதமான கருத்துக்களும், ஆழ்ந்த அலசல்களும், இருக்கும். அந்த வகையில் எனக்குத் தெரிந்து, அனைவரது சொல்லிலிருந்தும் மிகச்சிறந்த ஒரு மாநாட்டிற்கு இல்லை இல்லை ஒரு திருவிழாவிற்கு, மூன்று நாட்கள் எப்படி சென்றது என்றே தெரியாத அளவிற்கு நிகழ்வு இருந்தது என்று பல்வேறு விதமான பாராட்டுக்கள். இந்தப் பாராட்டுக்களுக்கு சொந்தக்காரர்கள், உரியவர்கள் இந்த அழகான ஓவியத்தை வடிவமைத்து, கட்டமைத்து, அதற்கு உயிர் கொடுத்து உழைத்த பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள். இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற பொருள் கொடுத்த, ஈகை கொடுத்த, உடல் உழைப்பை கொடுத்த, வழிகாட்டிய அனைவருக்கும் எங்களது மாநாட்டு குழுவின் சார்பாகவும், என் சார்பாகவும், சிரம் தாழ்ந்த, பணிவான நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

நிச்சயமாக, நமது மாவட்ட மாநாடு "அழகோவியம்" அனைவரது மனதிலும் ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்கி இருக்கிறது என நம்புகிறேன். அதேபோல, எதிர்வரும் நாட்களில் பல்வேறு திட்டங்களை மிக வேகமாக நடத்தி காட்ட இருக்கின்ற அனைத்து செயல் வீரர்களுக்கும் எனது வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்து, நன்றி பாராட்டி அடுத்த இதழில் உங்களை சந்திக்கும் வரை, பணிவுடன் விடைபெறுவது,

உங்கள் அன்பு நண்பர்,
**Rtn. Er. P. சிவசுந்தரம்**
மாவட்ட ஆளுநர்

# உதவி ஆளுநராகிய நான்...

## Rtn. சண்முகசுந்தரம்



ஒழுக்கமும் பண்பும் நிறைந்த என் தந்தை திரு. எஸ். கே. காவேரி, காவல் துறையில் உதவி ஆய்வாளராக (Sub-Inspector of Police) பணியாற்றி ஓய்வு பெற்றவர். என் தாயார் திருமதி கே. சின்னபொன்னு, என் வாழ்க்கை முழுவதும் எனக்கு உறுதுணையாக இருந்து வந்தவர்.

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் (M.Com) பெற்றேன். கல்லூரி நாட்களில் கல்வியுடன் சேர்ந்து, விளையாட்டு மற்றும் ஒழுக்கப் பயிற்சி எனது வாழ்க்கையின் முக்கிய பகுதியாக இருந்தது. தேசிய மாணவர் படை (NCC)யில் தீவிரமாக ஈடுபட்டு, Junior Division (ACC), பின்னர் College Senior Under Officer ஆகவும் பணியாற்றினேன். NCC `C' சான்றிதழ் பெற்ற பெருமையும் எனக்கு உண்டு.

புது டெல்லியில் நடைபெற்ற குடியரசுத் தின அணிவகுப்பில் தமிழ்நாடு அணியை பிரதிநிதித்துவப்படுத்திய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மேலும், மேற்கு வங்காளம், புர்துவானில் நடைபெற்ற 50 மீட்டர் ஸ்நாப் ஷூட்டிங் போட்டியிலும் பங்கேற்றேன். வெலிங்டன் MRC-யில் நடைபெற்ற இராணுவ இணைப்பு பயிற்சி முகாமிலும் கலந்து கொண்டேன்.

விளையாட்டு எனது வாழ்க்கையின் அடையாளமாகவே இருந்து வந்துள்ளது. நான் டெகாத்லான் வீரராகவும், வாலிபால் வீரராகவும், தமிழ்நாடு மாநிலத்தையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியுள்ளேன். விளையாட்டின் மூலம் கற்ற ஒழுக்கம், குழு ஒருமைப்பாடு, தலைமை பண்பு ஆகியவை என் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் எனக்கு வழிகாட்டியாக உள்ளன.

1981 ஆம் ஆண்டு, கனரா வங்கியில் Probationary Officer ஆக என் பணிப்பயணத்தைத் தொடங்கினேன். ஆந்திரப் பிரதேசம், கோவா, டெல்லி, பஞ்சாப், ஹிமாச்சலப் பிரதேசம், கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகிய பல மாநிலங்களில் பணியாற்றிய அனுபவம் எனக்கு கிடைத்தது. என் வங்கி பணிக்காலத்தில், தொழிற்சங்கப் பதவியாளராக ஊழியர் நலனுக்காக செயல்பட்டேன்.

37 ஆண்டுகள் சிறப்பான சேவைக்கு பிறகு, Senior Manager பதவியில் ஓய்வு பெற்றேன். என் அனுபவத்தை மதித்து, ஆடிட்டிங் பணிக்காக 3 ஆண்டுகள் நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது, Canara Bank Retired Officers' Association-இன் மத்திய குழு உறுப்பினராக தொடர்ந்து சேவை செய்து வருகிறேன்.

2011 ஆம் ஆண்டு, வங்கி பணியில் இருந்தபோதே ஏற்காடு ரோட்டரி சங்கத்தில் இணைந்தேன். 2017-18 ஆண்டில் சங்கத் தலைவராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட அளவில் பல பொறுப்புகளை ஏற்று ரோட்டரி சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

தற்போது, ஏற்காடு விளையாட்டு நலச் சங்கத்தின் ஆதரவாளராகவும், வாலிபால் பயிற்சியாளராகவும் இருந்து இளம் வீரர்களை வழிநடத்தி வருகிறேன். என் வழிகாட்டுதலில் பயிற்சி பெற்ற பல வீரர்கள் தமிழ்நாடு காவல் துறை மற்றும் தீயணைப்பு துறையில் பணியில் சேர்ந்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

தனிப்பட்ட வாழ்க்கையில், நான் திருமதி சித்ரலேகா அவர்களை மணந்துள்ளேன். எங்களுக்கு ஸ்வாதி என்ற மகள் உள்ளார். அவர் ஒரு மென்பொருள் பொறியாளர், கனடாவில் முதுகலைப் பட்டம் பெற்றவர், தற்போது பெங்களூரில் பணியாற்றி வருகிறார்.

2025-26 ஆண்டிற்கான உதவி ஆளுநர் என்ற பொறுப்பை ஏற்கும் இந்த தருணத்தில், சங்கங்களை வலுப்படுத்தவும், தலைமைத் திறன்களை வளர்க்கவும், "Service Above Self" என்ற ரோட்டரியின் உயரிய கொள்கையை நடைமுறையில் செயல்படுத்தவும் முழு அர்ப்பணிப்புடன் செயல்படுவேன்.

**Rtn. K. சண்முகசுந்தரம்**
**Assistant Governor, Zone - 23**
**Rotary Club of Yercaud**

STAR PROJECT

# “மாற்றுத் திறனாளிகளுக்கான சுயம்வரம் திருமண விழா சேவை மனப்பான்மையின் சிறந்த வெளிப்பாடு” - சேலம் எலைட் ரோட்டரி சங்கம்

**Rotary International District 2982**, சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கத்துடன் இணைந்து, மாற்றுத் திறனாளிகளின் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் வாழ்வாதார பாதுகாப்பை முன்னிறுத்தும் வகையில் சுயம்வரம் திருமண விழாவை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மனிதநேயச் சேவை நிகழ்ச்சி 07.12.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று, சேலம் , தெய்வீக திருமண மண்டபத்தில் காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெற்றது.

இந்த புனித நிகழ்வில், மாற்றுத் திறனாளிகளான 9 ஜோடிகளின் திருமணங்கள் சமூகப் பொறுப்புணர்வுடனும், பாரம்பரிய முறையிலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. மணமக்கள் அனைவருக்கும் திருமணத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பொருளாதார ஆதரவை சேலம் எலைட் ரோட்டரி சங்கம் வழங்கியது.

**பெருமைமிகு விருந்தினர்கள் - நிகழ்வின் மதிப்பை உயர்த்திய தலைசிறந்த பங்கேற்பு**

மாற்றுத் திறனாளிகளுக்கான சுயம்வரம் திருமண விழா, **Rotary International District** 2982-ன் மனிதநேயச் சேவைப் பணிகளைப் பிரதிபலிக்கும் வகையில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெருமைமிகு விருந்தினர்கள் கலந்து கொண்டதால் மேலும் சிறப்புற்றது.

முதன்மை சிறப்பு விருந்தினர் **Rtn. AKS Er. M. Muruganantham (MMM), Rotary International Director** இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

“மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையில் நிலையான மாற்றத்தை உருவாக்கும் வகையில், திருமணம் போன்ற அடிப்படை சமூக உரிமையை உறுதிப்படுத்துவது ரோட்டரியின் **Service Above Self** தத்துவத்தின் உயர்ந்த வடிவம்” என்று குறிப்பிட்டார். இத்தகைய திட்டங்கள், ரோட்டரி அமைப்பின் சேவைப் பாதையை உலகளாவிய அளவில் உயர்த்துவதாகவும் அவர் பாராட்டினார்.

கௌரவ விருந்தினரான **Rtn. MD Er. P. Sivasundaram**, ரோட்டரி 2982 மாவட்ட ஆளுநர் தமது உரையில், இந்த சுயம்வரம் திருமண விழா, ரோட்டரி மாவட்டத்தின் ஒருங்கிணைந்த சேவை முயற்சிகளின் விளைவு என்றும், சமூகத்தில் மாற்றுத் திறனாளிகள் மீதான பார்வையை நேர்மறையாக மாற்றும் முன்னோடி நிகழ்வாக இது திகழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.

திருமதி **B. Senbagavalli**, சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை சேவை முயற்சிகளுக்கு ரோட்டரி வழங்கும் பங்களிப்பை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்.



### சமூக சேவை - மருத்துவத் துறை பிரதிநிதிகள்

**Dr. Love-O. A.K. Nagarajan, PMJF,** சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கத்தின் காப்பாளர், இந்த விழா, மாற்றுத் திறனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு மட்டுமல்ல, சமூக மரியாதையும் வழங்கும் ஒரு வலுவான மேடையாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

### ரோட்டரி மாவட்ட நிர்வாகிகள்

நிகழ்வில் கலந்துகொண்ட முக்கிய ரோட்டரி நிர்வாகிகள் :

**Rtn. G. Revathi –** மாவட்ட சிறப்பு சேவைத் திட்டத் தலைவர்
**Rtn. PHF P. Vijayakumar –** மாவட்ட உதவி ஆளுநர், மண்டலம் 19
**Rtn. K. Durairaj –** சேவைத் திட்டத் தலைவர், **RC Salem West**
**Rtn. PHF S. Devarajan –** நிர்வாக இயக்குநர், **SPMM** மருத்துவமனை, சேலம்

இவர்கள் அனைவரும், ரோட்டரி அமைப்பின் சேவைப் பணிகள் சமூகத்தின் கடைசி நிலைவரை சென்றடைவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

### பொது வாழ்வுத் தலைவர்கள்

இந்த விழாவில், சேலம் மற்றும் தமிழக அளவில் முக்கிய பொதுவாழ்வு மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினர்:

திரு. **Dr. P. Athi Anna MJF,**
தலைவர், சேலம் மாவட்ட உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நல்வாழ்வு சங்கம்.

திரு. **R. Rajendran, B.A., B.L.,** முன்னாள் அமைச்சர், தமிழ்நாடு அரசு

திரு. **T.M. Selvaganapathy, M.A., LL.B.,** பாராளுமன்ற உறுப்பினர்

திரு. **S.R. Sivalingam,** மாநிலங்களவை உறுப்பினர்

**Dr. R. Birunthadevi,** சேலம் மாவட்ட ஆட்சி தலைவர்

அவர்களின் பங்கேற்பு, இந்த நிகழ்ச்சிக்கு சமூக மற்றும் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தை அளித்தது.

### ஒருங்கிணைந்த பங்கேற்பு

மேலும், ரோட்டரி 2982'ன் முன்னாள் மற்றும் தற்போதைய மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட நிர்வாகிகள், பிற சங்க உறுப்பினர்கள், சமூக அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

சேலம் எலைட் ரோட்டரி சங்கத்தின் தலைவர் **Rtn. Maheshkumar** அவர்களின் தலைமையில், இத்தகைய சமூக மாற்றத்தை உருவாக்கும் சேவைத் திட்டங்கள் எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற உறுதியை இந்த நிகழ்வு வெளிப்படுத்தியது.

திருமண விழாவிற்கான திட்டமிடல், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, மணமக்களுக்கான தேவைகள் மற்றும் விருந்தினர் வரவேற்பு ஆகிய அனைத்திலும் சேலம் எலைட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் நேரடியாக பங்கேற்று, சேவை என்பது வெறும் நிதியுதவி அல்ல, நேரடி ஈடுபாடும் பொறுப்புணர்வும் என்பதை நடைமுறையில் நிரூபித்தனர்.










Rtn. MD. P. சிவசுந்தரம்

கௌரவ விருந்தினராக
Rtn. MD. P. சிவசுந்தரம்

# ROTARY CLUB OF SALEM DIVINE HEARTS
# CHARTER INSTALLATION

இந்தியாவிலேயே முதன் முறையாக மாற்றுத்திறனாளிகள்மட்டுமே அமைத்த முதல் ரோட்டரி சங்கம் என்ற பெருமையுடன் **Rotary Club of Salem Divine Hearts**–இன் சாசன மற்றும் பதிவியேற்பு விழா 07.12.2025 அன்று **Hotel Windsor Castle,** சேலத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வை **RC Salem Gymkhana** பெருமையுடன் ஸ்பான்சர் செய்தது.

**Rtn. P. Manikandan –** சாசன தலைவர், **Rtn. D. Jakir Hussain** சாசன செயலாளர், **Rtn. C. Vijay Kumar** சாசன பொருளாளர், உட்பட 2025-26 குழு பதவியேற்றனர்.

விழாவின் சிறப்பு விருந்தினர் **Rtn. AKS Er. Murugananandam M (RI Director 2025–27)** பேசுகையில்; **RC Salem Gymkhana** தலைவர் **Rtn. PS. Kaamaraj Pillai** அவர்களின் முன்னோடியான முயற்சியை விசேஷமாக பாராட்டினார். உடல் நலச்சிக்கல்கள் இருந்தாலும் சேவை மனப்பாங்கு எல்லைகளை கடந்தது என்பதை **Divine Hearts** உலகிற்கு நிரூபித்துள்ளது என்றார்.

மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P. Sivasundaram** தனது வாழ்த்துரையில்; இந்த தனித்துவமான சங்கத்தை உருவாக்குவதில் தலைவர் **Rtn. PS. Kaamaraj Pillai** அவர்களின் தன்னலமற்ற சேவை உணர்வையும், வலுவான வழிகாட்டுதலையும் மனமுவந்து பாராட்டினார். இந்தக் சங்கம் ரோட்டரியின் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் மதிப்புகளின் சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பதைக் குறிப்பிட்டார்.

கௌரவ விருந்தினரான **Rtn. S. Sureshkumar – DGND** அவர்கள் **"Ability Beyond Disability"** என்பதை உணர்த்திய இந்த சாசன விழா, **RID 2982** வரலாற்றில் ஒரு பெரும் மைல்கல் என புகழாரம் சூட்டினார் , மேலும் **Rtn. Dr. R. Rajesh – District Membership Chair** மற்றும் **Rtn. Hr. K. Vasumathi – AG, Zone 21** அவர்களும் தனது வாழ்த்துக்களையும் பகிர்ந்தனர்.

சேலம் **Gymkana** ரோட்டரி சங்கத்தின் தலைவர் **Rtn. PS. Kaamaraj Pillai,** செயலாளர் **Rtn. V. Sureshbabu** , பொருளாளர் **Rtn. K. Nagendran** மற்றும் சங்க உறுப்பினர்களால் ஸ்பான்சர் செய்ததோடு மட்டுமல்லாமல் நிகழ்வை மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் .






ROTARY CLUB OF SALEM GYMKHANA
ROTARY CLUB OF SALEM DIVINE HEARTS




Rotary
RID 2982










I'M A PROUD MEMBER



அழகோவியம்
2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025

DATE
26, 27, 28
DECEMBER 2025

FOUR POINTS BY SHERATON
RESORT & CONVENTION CENTER
MAHABALIPURAM

# ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு!

ரோட்டரி மாவட்ட 2982-ன் "அழகோவியம் 2025" மாநாடு, வெறும் சந்திப்பாக மட்டுமன்றி, கலை, இலக்கியம், தலைமைத்துவம் மற்றும் விருந்தோம்பல் என அனைத்துத் துறைகளிலும் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டின் அலசல் இதோ :

**தொடக்கமும் எழுச்சியும் :** மாநாடு தொடங்கிய முதல் நாளிலேயே அதன் பிரம்மாண்டம் வெளிப்பட்டது. மேளதாளங்கள் முழங்க நடைபெற்ற கொடியேற்றம் மற்றும் ஊர்வலம், உறுப்பினர்களிடையே ஒரு மிகப்பெரிய உற்சாகத்தை விதைத்தது. மாவட்ட ஆளுநர் **Rtn. MD. Er. P.** சிவசுந்தரம் மாநாட்டை முறைப்படி தொடங்கி வைக்க, மாநாட்டுத் தலைவர் **Rtn.** மின்னல் **N.** கந்தசாமியின் வரவேற்புரை அனைவரையும் அரவணைப்பதாக அமைந்தது. **RI** தலைவரின் பிரதிநிதி **Rtn. PDG. J.** ஸ்ரீதர் மற்றும் முதன்மை விருந்தினர் **Rtn. AKS. Er.** முருக்கானந்தம் ஆகியோரின் உரைகள் உறுப்பினர்களுக்குப் புதிய உத்வேகத்தை அளித்தன.

**சிந்தனைப் பசிக்கு விருந்து :** இரண்டாம் மற்றும் மூன்றாம் நாட்கள் அறிவுப்பூர்வமான அமர்வுகளால் நிரம்பி வழிந்தன.

- **தலைமைத்துவம் :** திரு. K. அண்ணாமலை முன்னாள் IPS. அவர்களின் "தலைமைப் பண்பு ஒரு மாண்பு" என்ற உரை அரங்கம் முழுவதும் அதிரவைத்தது.
- **இலக்கியம்:** நடிகர் சிவகுமாரின் என் பார்வையில் வள்ளுவன் மற்றும் பத்மபூஷண் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் "கரிமமும் வைரமாகும்" என்ற உரை தமிழுக்கும் மாநாட்டிற்கும் பெருமை சேர்த்தன.
- **சமூகப் பார்வை :** ஊடகவியலாளர் செந்தில்வேல் மற்றும் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோரின் உரைகள் தற்காலச் சமூகத்திற்குத் தேவையான ஆழமான கருத்துக்களை முன்வைத்தன.

**மறக்க முடியாத கலை மற்றும் கொண்டாட்டங்கள் :** கலை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, இசை மற்றும் நகைச்சுவைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. சுமேஷ் கூட்டிக்கல் குழுவினரின் இசை மழையும், விஜய் டிவி புகழ் முல்லை & கோதண்டம் ஆகியோரின் நகைச்சுவை அதிரடியும் பிரதிநிதிகளுக்கு நல்லதொரு புத்துணர்ச்சியை அளித்தன. குறிப்பாக **'Gala Cultural Night'** மாநாட்டின் உற்சாகத்தைத் உச்சத்திற்கு கொண்டு சென்றது.

**சுவைமிகுந்த விருந்தோம்பல் :** இந்த மாநாட்டின் மற்றொரு முக்கிய சிறப்பம்சம் அதன் உணவு ஏற்பாடுகள். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்பதற்கிணங்க, பொட்டு மணி **(Pottu Mani)** மற்றும் அவரது குழுவினர் வழங்கிய அபரிமிதமான விருந்தோம்பல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. சுவை மற்றும் தரம் என இரண்டிலும் சமரசம் செய்யாத அவர்களின் உழைப்பு, மாநாட்டிற்கு வந்திருந்த ஒவ்வொரு பிரதிநிதிக்கும் ஒரு "தேவலோக" உணவு அனுபவத்தை வழங்கியது என்றால் அது மிகையல்ல.

**நிர்வாகத் திறன் மற்றும் நிறைவு :** மாநாட்டை மிக நேர்த்தியாகத் திட்டமிட்ட மாநாட்டுச் செயலாளர் **Rtn. Dr. N.** மதன் கார்த்திக் மற்றும் குழுவினரின் உழைப்பு பாராட்டுக்குரியது. 2028-29 ஆம் ஆண்டிற்கான மாவட்ட ஆளுநர் நியமனம் மற்றும் 2026 தைபே சர்வதேச மாநாட்டிற்கான அழைப்பு என எதிர்காலத் திட்டங்களும் இந்த மாநாட்டில் உறுதி செய்யப்பட்டன. இறுதியாக **Rtn. S.** கர்ணன் அவர்களின் நன்றியுரையுடன், புதிய நட்புறவுகளையும் நினைவுகளையும் சுமந்து "**அழகோவியம் 2025**" இனிதே நிறைவடைந்தது.



Rtn. Francesco Arezzo
Rotary International President

# அழகோவியம்

2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025

DATE
26, 27, 28
DECEMBER 2025

FOUR POINTS BY SHERATON
RESORT & CONVENTION CENTER
MAHABALIPURAM

















**Rtn. Er. P. Sivasundaram**
District Governor

**Rtn. Minnal N. Kandasamy**
Conference Chairman

**Rtn. Dr. N. Mathan Karthick**
Conference Secretary

**Rtn. PDG. Dharmesh R. Patel**
District Conference Promotion Advisor

**Rtn. R.P. Karunaharan**
Conference Treasurer

**Rtn. S. Suresh Kumar**
Conference Promotion Chairman

**Rtn M. Viswanathan**
Conference Registration Chairman
































Rtn. Francesco Arezzo
Rotary International President

# அழகோவியம்

2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025

DATE
**26, 27, 28**
**DECEMBER 2025**

FOUR POINTS BY SHERATON
RESORT & CONVENTION CENTER
MAHABALIPURAM


























**Rtn. Er. P. Sivasundaram**
District Governor

**Rtn. Minnal N. Kandasamy**
Conference Chairman

**Rtn. Dr. N. Mathan Karthick**
Conference Secretary

**Rtn. PDG. Dharmesh R. Patel**
District Conference Promotion Advisor

**Rtn. R.P. Karunaharan**
Conference Treasurer

**Rtn. S. Suresh Kumar**
Conference Promotion Chairman

**Rtn M. Viswanathan**
Conference Registration Chairman


























**Rtn. Francesco Arezzo**
Rotary International President

# அழகோவியம்

2982 ரோட்டரி மாவட்ட மாநாடு 2025

**DATE**
**26, 27, 28**
**DECEMBER 2025**

FOUR POINTS BY SHERATON
RESORT & CONVENTION CENTER
MAHABALIPURAM
















**Rtn. Er. P. Sivasundaram**
District Governor



**Rtn. Minnal N. Kandasamy**
Conference Chairman

**Rtn. Dr. N. Mathan Karthick**
Conference Secretary

**Rtn. PDG. Dharmesh R. Patel**
District Conference Promotion Advisor


**Rtn. R.P. Karunaharan**
Conference Treasurer

**Rtn. S. Suresh Kumar**
Conference Promotion Chairman

**Rtn M. Viswanathan**
Conference Registration Chairman



























# மாவட்டடத்தில் முக்கிய நிகழ்வுகள்




**RID 3231** இன் திருவண்ணாமலை மூன் சிட்டி ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்த **DEEPAM 1025, 2025** டிசம்பர் 11 மற்றும் 12 தேதிகளில் திருவண்ணாமலையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின் முக்கிய தருணமாக நமது மாவட்ட ஆளுநர் **Er. P.** சிவசுந்தரம் அவர்கள் கௌரவிக்கப்பட்டது அனைவருக்கும் ஊக்கமளித்த சிறப்பான நிகழ்வாக அமைந்தது.

---

மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** பி. சிவசுந்தரம் அவர்கள் தர்மபுரி நகரில் அமைந்துள்ள தகன மண்டபக் கூடத்தை மாவட்ட ஆட்சியர், நகராட்சி தலைவர் மற்றும் தர்மபுரி ரோட்டரி அறக்கட்டளை தலைவர் **Rtn. DNC** மணிவண்ணன் அவர்களின் முன்னிலையில் சிறப்பாக திறந்து வைத்தார்.

“நந்தவனம்” என பெயரிடப்பட்ட இந்தக் கூடம், தர்மபுரி ரோட்டரி சங்கம், தர்மபுரி மிட் டவுன் ரோட்டரி சங்கம் மற்றும் தர்மபுரி எலைட் ரோட்டரி சங்கம் ஆகிய சங்கங்களின் இணைந்த முயற்சியால் கட்டமைக்கப்பட்டுள்ளது. சமூகத்திற்கு மரியாதையும் மனிதநேயமும் வழங்கும் இந்தச் சேவைத் திட்டம், ரோட்டரியின் உயரிய நோக்கத்தை சிறப்பாக பிரதிபலிக்கிறது.



---



14/12/25 அன்று ஜலகண்டபுரத்தில் ஜலகண்டபுரம் ரோட்டரி சங்கம் மற்றும் கோவை **GEM** மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் மருத்துவ முகாம் வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் 367 பேர் நேரடி மருத்துவ சேவைகள் பெற்றனர். நிகழ்வில் மாவட்ட ஆளுநர் **Er. P. Sivasundaram** சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமை அலங்கரித்தார்.

---

கள்ளக்குறிச்சி ரோட்டரி சங்கம் மற்றும் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 195 நபர்கள் பரிசோதிக்கப்பட்டனர். அவர்களில் 57 நபர்கள் மேல் அறுவை சிகிச்சைக்காக சங்கரா கண் மருத்துவமனை, கோயம்புத்தூர்க்கு பரிந்துரைக்கப்பட்டனர். இந்த முயற்சி, சமூகத்தின் கண் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், அனைவருக்கும் கண் பராமரிப்பு சேவைகள் கிடைக்கவும் ரோட்டரி அமைப்பின் உறுதியினை வெளிப்படுத்துகிறது.




---



**RC Salem Young Town** மற்றும் **RID 3233** இணைந்து **"Grand Fellowship Gala "** என்ற நிகழ்வு 21 டிசம்பர் அன்று நடைபெற்றது, **RC Salem Wings, RC Salem Gymkhana , RC Salem Miracle** மற்றும் **RC Salem Metropolis** ஆகிய சங்கங்களின் பங்கேற்பு நிகழ்விற்கு தனிச்சிறப்பு சேர்த்தது.

# குறுக்கு எழுத்துப் போட்டி



## இலக்கிய குறுக்கெழுத்துப் போட்டி

**இடமிருந்து வலம்**

1. ஆகாயத்தின் எல்லையை எப்படியும் எட்டிப் பிடித்து விடுவான் (4)
3. மாவுப் பொருளுக்கு வண்ணம் கொடு (1,1)
7. ஒரு மதிப்பெண் கூட இழக்கவில்லை (5, 2)
9. நெற்றிப் பொட்டு (4)
10. உரக்கலவை சில களைகளையும் நீக்கியதால் ஏற்பட்ட மகிழ்ச்சி (3)
11. தான் நெற்றியில் சூடிய அணிகலனின் பெருமையை ஊரெல்லாம் முரசு அடித்துச் சொல்லாத குறைதான் (6)
12. சினிமா சினிமா என்ற பிதற்றல் தெளிவதற்குள் பங்குனியே வந்து விடுகிறது (2)
15. பாறை இடுக்கினுள் சற்றே உற்றுப் பார்த்தால் ஒரு பெரும் படையே தங்கியிருக்கிறது (3)
16. கம்பி திருடும் கள்வனைப் பார்த்ததும் கம்மென்று தப்பித்து வந்திடு (5)
17. ஓலைச் சுவடியில் எழுதும் பேனா? (2)

**மேலிருந்து கீழ்**

1. மொத்த விலை கொடுத்து சரடு வாங்கிக் கோர்த்தால் சங்க இலக்கிய புத்தகம் ஒன்று கிடைக்கிறது (2, 2)
2. முதல் இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு வந்த இல்லற வாட்டம் பந்த சொந்தங்களையும் குழப்பி, அறம் அறுக, பறக்க முடியாத பருவமாய் ஆக்கி விட்டது (5, 4)
4. மனதார கைகளுக்குள் பார்த்தால் விண்மீன் தெரியும் (3)
5. கூட்டணி கட்சிகளுடன் செய்யப்படும் ஒப்பந்தம் (3, 5)
6. வசீகரத்தால் அவளை மயக்கம் கொள்ளச் செய் (3,1)
8. நூல் அதிகம் சேர்ந்து விட்டதனால் தினம் போய் படிப்பது நலம் (4)
11. ஸ்டாலினுக்கும் விஜய்க்கும் சின்ன வித்தியாசம் தான் (4)
13. மிகச்சிறு வாணிபத்தில் பணம் ஆறாக ஓடுகிறது (4)
14. எடையைக் கொண்டு வெற்றிடம் நிரப்பு (2)

---

**இதற்கு விடை இதே பதிப்பில் ஒரு பக்கத்தில் உள்ளது.**

---

# ஜனவரி மாத ரோட்டரி தலைப்பு :
# தொழில் சேவை மாதம்




ரோட்டரி ஆண்டுக் கால அட்டவணையில் ஜனவரி மாதம் "தொழில் சேவை மாதம்" **(Vocational Service Month)** ஆக அனுசரிக்கப்படுகிறது. ரோட்டரியின் ஐந்து சேவை வழிகளில் ஒன்றான தொழில் சேவை, ரோட்டரியின் அடிப்படை தத்துவங்களையும் நோக்கங்களையும் பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு ரோட்டேரியனும் தங்கள் தொழில், திறமை மற்றும் அனுபவத்தை சமூக நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்பதே இதன் மையக் கருத்தாகும்.

ரோட்டரி, ஒவ்வொரு தொழிலுக்கும் மரியாதையும் மதிப்பும் உண்டு என்று உறுதியாக நம்புகிறது. தொழிலதிபர், மருத்துவர், பொறியாளர், ஆசிரியர், விவசாயி, கைவினை கலைஞர் அல்லது சேவைத் துறையில் பணியாற்றுபவர் யாராக இருந்தாலும், அவர்களின் தொழில் சமூக வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது. தொழில் சேவை மாதம், அனைவரையும் நேர்மை மற்றும் ஒழுக்கத்துடன் தங்கள் தொழிலை மேற்கொள்ள ஊக்குவிக்கிறது. இதற்கு வழிகாட்டியாக ரோட்டரியின் நான்கு வழித் தேர்வு **(Four-Way Test)** செயல்படுகிறது.

தொழில் சேவையின் முக்கிய அம்சமாக, தொழில்திறன்களைப் பகிர்ந்து கொள்வது அமைந்துள்ளது. இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், வேலைவாய்ப்பு சார்ந்த திட்டங்கள் மற்றும் தொழில் முனைவு ஊக்குவிப்பு ஆகியவற்றின் மூலம் ரோட்டரி சமூகத்தில் மாற்றத்தை உருவாக்குகிறது. இத்தகைய முயற்சிகள் இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் மட்டுமல்லாது, அவர்களை தன்னம்பிக்கையுடன் சமூகத்தில் நிலைநிறுத்துகின்றன.

தொழில் சேவை என்பது தனிநபர் முன்னேற்றத்துடன் மட்டும் முடிவதில்லை. சமூக சவால்களை எதிர்கொள்ள தொழில்நுட்ப அறிவு, அனுபவம் மற்றும் தலைமைத்துவத்தை பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும். சிறு தொழில்கள் வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், நெறிமுறையுடன் கூடிய வணிக நடைமுறைகள் போன்றவற்றில் ரோட்டரி சங்கங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. சமூகத்தில் சிறந்து விளங்கும் தொழில்முனைவோர் மற்றும் தொழிலாளர்களை பாராட்டி ஊக்குவிப்பதும் தொழில் சேவையின் ஒரு பகுதியாகும்.

இன்றைய வேகமாக மாறிவரும் உலகில், தொழில் சேவையின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது. புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்கள் உருவாகும் இந்த காலகட்டத்தில், தொடர்ந்த கற்றல், மாற்றத்திற்கு ஏற்ப ஒத்துழைப்பு மற்றும் ஒழுக்கமான தலைமைத்துவம் ஆகியவற்றை ரோட்டரி வலியுறுத்துகிறது. "தன்னலமற்ற சேவை" **(Service Above Self)** என்ற கொள்கையின் அடிப்படையில், தொழில்சார் சிறப்பை சமூக சேவையுடன் இணைப்பதே ரோட்டரியின் தனித்துவமாகும்.

இந்த தொழில் சேவை மாதத்தில், ஒவ்வொரு ரோட்டேரியனும் தங்கள் தொழிலின் மூலம் சமூகத்திற்கு பயனளிக்க மறுபடியும் உறுதி எடுத்துக் கொள்வோம். வழிகாட்டுதல், ஊக்குவிப்பு மற்றும் அதிகாரமளித்தல் மூலம் நம் தொழில்கள் சேவையின் கருவிகளாக மாறட்டும். இதன் மூலம் தனிநபர் வாழ்க்கையும் சமூகமும் வளமுடன் வளர்வதை உறுதி செய்வோம்.

# எனது நூலகம்




சமீபத்தில் நான் வாசித்த ஒரு புத்தகம் எனது சிந்தனைப் போக்கையே மாற்றியமைத்தது. அதைப் படித்தவுடன் எனக்கு உடனடியாக உங்கள் ஞாபகம் தான் வந்தது. அந்தப் புத்தகம், நார்மன் வின்சென்ட் பீல் எழுதிய "நேர்மறை சிந்தனையின் ஆற்றல்" **(The Power of Positive Thinking).**

இன்றைய பரபரப்பான மற்றும் மன அழுத்தம் நிறைந்த சூழலில், தேவையற்ற கவலைகளுக்கும் சுய சந்தேகங்களுக்கும் நாம் ஆளாகிறோம். இந்தப் புத்தகம் வெறும் "நம்பிக்கை தரும் வார்த்தைகளை" மட்டும் கூறாமல், நம் மனநிலையை எப்படி ஆக்கபூர்வமாக மாற்றுவது என்பதற்கான நடைமுறை வழிகளையும் வழங்குகிறது. குறிப்பாக, இதில் சொல்லப்பட்டுள்ள 'காட்சிப்படுத்துதல்' **(Visualization)** மற்றும் 'மன ஒழுக்கம்' போன்ற பயிற்சிகள் தன்னம்பிக்கையை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**இந்தப் புத்தகத்தை நான் ஏன் உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன்?**

- ✦ செயல்முறை விளக்கம் : இது வெறும் தத்துவங்களைப் பேசாமல், தடைகளைத் தகர்க்கத் தேவையான நடைமுறைப் பயிற்சிகளைக் கற்பிக்கிறது.
- ✦ மன உறுதி: இக்கட்டான சூழ்நிலைகளிலும் மன அமைதியுடனும், தெளிவாகவும் செயல்படுவது எப்படி என்பதை இது விளக்குகிறது.
- ✦ காலம் கடந்த அறிவுரை : இந்தப் புத்தகம் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்தாலும், இன்றைய நவீன காலத்திற்கும் இதிலுள்ள கருத்துக்கள் மிகவும் பொருந்துகின்றன.

உங்கள் தொழில்முறை வளர்ச்சிக்கோ அல்லது தனிப்பட்ட மன அமைதிக்கோ இது ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

நேரம் கிடைக்கும்போது இந்தப் புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். வாசித்த பிறகு உங்கள் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

காலங்கள் மாறினாலும் மனிதனின் அடிப்படை உணர்ச்சிகள் மாறுவதில்லை. அதனால்தான், அரை நூற்றாண்டுக்கு முன்பு சொல்லப்பட்ட இந்த ஆலோசனைகள், இன்றைய 'டிஜிட்டல்' யுகத்தின் மன அழுத்தத்திற்கும் மிகச்சிறந்த மருந்தாக அமையும் என நான் நம்புகிறேன்

**இது போன்று உங்களுக்கும் உங்கள் விருப்பமான புத்தகத்தை பற்றி இங்கு பகிரலாம்.**

# ரோட்டரி இன்டர்நேஷனலின் தலைவராக பொறுப்பேற்கும் இரண்டாவது ஆப்பிரிக்கர் ஓலாயின்கா ஹகீம் பாபலோலா



உலகளாவிய சேவை அமைப்பான ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் 2026-27 ஆண்டுக்கான தலைவராக நைஜீரியாவைச் சேர்ந்த ஓலாயின்கா ஹகீம் பாபலோலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் 2026 ஜூலை 1 அன்று அதிகாரப்பூர்வமாக பதவியேற்க உள்ளார்.

நைஜீரியா, டிரான்ஸ் அமாடி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான பாபலோலா, இந்தப் பதவியை வகிக்கும் இரண்டாவது ஆப்பிரிக்கர் என்ற பெருமையைப் பெறுகிறார். இதற்கு முன், 2003-04 ஆம் ஆண்டில் நைஜீரியாவின் ரோட்டரி கிளப் ஆஃப் காணோவைச் சேர்ந்த ஜோனத்தன் பி. மஜியக்பே இந்தப் பதவியை வகித்திருந்தார்.

"ரோட்டரி பலரின் வாழ்க்கையை மாற்றுகிறது - நாம் செயல்படுத்தும் திட்டங்களால் மட்டுமல்ல, நாம் பகிரும் நம்பிக்கையாலும், உருவாக்கும் உறவுகளாலும், ஊக்குவிக்கும் ஒருங்கிணைந்த நோக்கத்தாலும்," என பாபலோலா தெரிவித்தார்.

"உரையாடலும் புரிதலும் மிக அவசியமான இக்காலத்தில், அமைதி, வாய்ப்புகள், சமூக வளர்ச்சி ஆகியவற்றை முன்னேற்ற ரோட்டரியை வழிநடத்துவதே என் தலையாய பணி," என்றும் அவர் கூறினார்.

**அமைதியும் சமூக வளர்ச்சியும்**

30 ஆண்டுகளுக்கும் மேலான ரோட்டரி அனுபவம் கொண்ட பாபலோலா, அமைதி கட்டமைப்பு **(Peacebuilding)** மற்றும் சமூக மேம்பாடு ஆகிய துறைகளில், குறிப்பாக ஆப்பிரிக்க கண்டத்தில், குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியவர்.

உகாண்டாவின் மேக்கரேரே பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள - ஆப்பிரிக்காவின் முதல் ரோட்டரி அமைதி மையத்துடன் **(Rotary Peace Center)** அவர் நெருங்கிய தொடர்பில் இருந்து செயல்பட்டு வருகிறார். அங்கு பயிற்சி பெற்ற **Peace Fellows** தங்களது கல்வியை நடைமுறை சமூகத் திட்டங்களாக மாற்றுவதற்கு அவர் வழிகாட்டியுள்ளார்.

**போலியோ ஒழிப்பு**

ரோட்டரியின் போலியோ ஒழிப்பு இயக்கத்தில் பாபலோலா முக்கிய பங்கு வகித்துள்ளார்.

அவர் **End Polio Now – Countdown to History Campaign Committee** உறுப்பினராகவும், நைஜீரியா தேசிய **PolioPlus** குழுவின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

2020 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்கா கண்டம் போலியோ வைரஸிலிருந்து விடுபட்டது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். இருப்பினும், தடுப்பூசி மற்றும் கண்காணிப்பு மூலம் கட்டுப்படுத்தக்கூடிய வகை போலியோ பாதிப்புகளை எதிர்கொள்ள ரோட்டரி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**தொழில்முறை வாழ்க்கையும் ரோட்டரி தலைமைத்துவமும்**

பாபலோலா பொறியியல் பட்டம் பெற்றவர்.

**Shell PLC** நிறுவனத்தில் மூத்த நிர்வாகப் பொறுப்புகள் உட்பட, 30 ஆண்டுகளுக்கும் மேலாக எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

அவர் **Riviera Technical Services Ltd.** (எண்ணெய் – எரிவாயு கட்டமைப்பு சேவைகள்) மற்றும் **Lead and Change Consulting** (நிர்வாக ஆலோசனை மற்றும் செயல்திறன் மேம்பாடு) ஆகிய நிறுவனங்களை நிறுவியுள்ளார்.

மேலும், நைஜீரிய பொறியியலாளர்கள் சங்கம், **Institute of Safety Professionals**, **Association of Change Management** பிரசடிஷனர்ஸ் ஆகிய அமைப்புகளின் உறுப்பினராகவும்,இபாடானில் உள்ள **Jericho Business Club** என்ற குடிமக்கள் அமைப்பின் உறுப்பினராகவும் இருந்து தேசிய கொள்கை உரையாடல்களில் பங்கேற்று வருகிறார்.

**ரோட்டரி பயணம் மற்றும் அறக்கட்டளை**

1984 ஆம் ஆண்டில் ரோட்டராக்ட் மூலம் ரோட்டரியில் இணைந்த பாபலோலா, 1994 ஆம் ஆண்டு **Rotary Club of Trans Amadi**யில் உறுப்பினரானார். அதன் பின்னர் பல்வேறு தலைமைப் பொறுப்புகளை வகித்துள்ளார். தற்போது, ரோட்டரியின் அதிகாரப்பூர்வ பேரிடர் நிவாரண அமைப்பான **Shelter Box UK** நிறுவனத்தின் **Trustee** ஆகவும் பணியாற்றி வருகிறார்.

அவரும் அவரது மனைவி பிரேபாவும், **The Rotary Foundation**க்கு வலுவான ஆதரவாளர்கள். அவர்கள் பெயரில் ஒரு **Named Endowment** அமைக்கப்பட்டுள்ளதுடன், ரோட்டரியின் உயரிய நன்கொடை அங்கீகாரமான **Arch Klumph Society** உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

**அவருக்கு கிடைத்த ரோட்டரி விருதுகள்:**

- Africa Centennial Heroes Award
- Service Above Self Award
- Polio-Free World Regional Service Award
- The Rotary Foundation Citation for Meritorious Service

**எதிர்பார்ப்புகளுடன் ஒரு வரலாற்றுப் பதவி**

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகப் பொறுப்பேற்கும் பாபலோலாவின் பதவிக்காலம், அமைதி, சேவை, உலகளாவிய ஒத்துழைப்பு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும் என்றும், ரோட்டரியில் ஆப்பிரிக்காவின் தலைமைத்துவ பங்கை உலகளவில் உயர்த்தும் என்றும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

## Dist. First Lady Message



அன்புள்ள **Rotarians, Anns & Annets,**

கடந்த ஆண்டு நமது ரோட்டரி குடும்பத்தின் தனித்துவமான சேவை மனப்பாங்கு, பகிர்மானம் மற்றும் அர்ப்பணிப்பு நமக்கு உற்சாகமும், உறுதுணையுமாக இருந்தது. இந்த புதிய ஆண்டும், நாம் அனைவரும் நம்பிக்கையுடன் செயல்பட்டு, சமூகத்திற்கு மேலும் பல சாதனைகள் கொடுக்க உறுதி செய்வோம். 2026 ஆம் ஆண்டினை மேம்பட்ட சேவை, உற்சாகமான உறவுகள் மற்றும் மறக்கமுடியாத அனுபவங்கள் நிறைந்த ஆண்டாக மாற்றுவோம்.

இந்த புதிய ஆண்டு உங்கள் மனத்திலும், குடும்பங்களிலும் நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் சமநிலை நிறைந்திருக்குமென வேண்டுகிறேன். உங்கள் ஒவ்வொரு சேவையும், நட்பு மற்றும் அர்ப்பணிப்பையும் நான் மனமார்ந்து பாராட்டுகிறேன்.

நன்றியுடனும் பாராட்டுடனும்,

**Rtn. MD. G.K. சுதாமதிதேவி**

# சங்க திட்டங்கள்



**RC HOSUR ROYALS**
Flag Exchange



**RC HOSUR ROYALS**
Nutrition Kit Donation




**RC JALAGANDAPURAM**
Medical Camp



**RC KALLAKURICHI**
Annadhanam



**RC KALALKURICHI**
Annadhanams



**RC KOMARAPALAYAM**
Sports Materials Donated




**RC KRISHNAGIRI**
Awareness Rally




**RC KRISHNAGIRI**
Flag Exchange

# சங்க திட்டங்கள்



**RC NAMAKKAL EVERGREEN CITY**
Cloth Bags for Devotees




**RC SALEM CITY**
Annadhanam



**RC SALEM CITY**
Tree Plantation



**RC SALEM EAST**
Medical Camp



**RC SALEM EAST**
Rain Coat Donated to Postmans




**RC SALEM**
Education Fund Donation



**RC SALEM GUGAI**
Children's Day Celebration




**RC SALEM GUGAI**
Wheel Chair Donated

# சங்க திட்டங்கள்



**RC SALEM METROPOLIS**
Skill Development to School Students




**RC SALEM RUPAVATI**
Cyber Awarness




**RC SALEM SUNSTAR**
computer Donatation




**RC SALEM TEXCITY**
Donated Grocery item to Old Age Home



**RC SALEM TEXCITY**
Dresses Donated




**RC SALEM TEXCITY**
Education Aid



**RC SALEM TEXCITY**
Marriage Material Donation



**RC THIYAGATHUGAM**
Dress Donation

# சங்க திட்டங்கள்




**RC ULUNDURPET**
Awareness Rally




**RC ULUNDURPET**
Treatment Fund Donated



**RC VILLUPURAM**
Yoga Day Celebration



**RC VILLUPURAM**
Tree Plantation




மிகுந்த வருத்தத்துடன் Rtn. PDG P. V. Purushothaman (RID 2982) அவர்களை நினைவுகூருகிறோம். **"சேவை தான் உயிரின் அர்த்தம்"** என்ற ரோட்டரி மனப்பான்மையை அவர் வாழ்வில் முழுமையாக வெளிப்படுத்தி, எண்ணற்ற சேவைகளுக்கு வழிகாட்டியவர். அவரது அர்ப்பணிப்பு, மனித நேயம் மற்றும் முன்னோக்கிய பார்வை எப்போதும் நினைவில் நிற்கும். அவர் 5ம் ஜனவரி 2026 அன்று நமிடமிருந்து பிரிந்தாலும், அவரது சேவை பாரம்பரியம் எப்போதும் நம்முள் வாழும்.

**அவரது ஆன்மா அமைதியில் உறங்கட்டும்.**

Rotary

# கேள்வி களஞ்சியம்




கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான பதிலை டிக் செய்து 9894698936 இந்த எண்ணிற்கு **Whatsapp** செய்வோர் அடுத்த இதழில் அவர்களின் பெயரை "வெற்றி வாசகர்" என்று கௌரவிக்கப்படுவர்.

1. 1. மொத்தம் எத்தனை மாற்றுத்திறனாளிகளுக்கு திருமணம் நடத்தி கௌரவித்தது சேலம் எலைட் ரோட்டரி சங்கம்

   a) 5 b) 3 c) 9 d) 7

2. சேலம் டிவைன் ஹார்ட்ஸ் ரோட்டரி சங்கத்தினை எந்த சங்கம் **sponsor** செய்த்துள்ளது

   a) RC Salem Gymkhana b) RC Salem East c) RC Salem West d) RC Salem South

3. **Vocational Service -** எந்த மாதத்திற்கான ரோட்டரி கருப்பொருள்

   a) நவம்பர் b) டிசம்பர் c) ஜனவரி d) பிப்ரவரி

4. நமது மாவட்ட ஆளுநரின் உரையில் எத்தனை முறை 'உள்ளபடியே' என்ற வாரத்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது

   a) 5 b) 6 c) 2 d) 3

5. 'ஓலாயின்கா ஹகீம் பாபலோலா' எந்த ரோட்டரி ஆண்டிற்கான தலைவர்

   a) 2028-29 b) 2029-30 c) 2026-27 d) 2027-28

6. **Carmel-by-the-Sea** ரோட்டரி எந்த சேவை திட்டத்தை தொடர்ந்து வெற்றிகரமாக செய்வதாக **RI President Francesco Arezzo** கூறுகிறார்

   a) கார்கள் பழுது பார்க்கும் பயிற்சி b) மொபைல் பழுது பார்க்கும் பயிற்சி
   c) போலியோ திட்டம் d) தூய்மை திட்டம்

7. மாவட்ட மாநாடு அழகோவியம் எத்தனை நாட்கள் நடைபெற்றது.

   a) 1 b) 2 c) 3 d) 4

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் அனைத்தும் இந்த இதழில் இருந்தே எடுக்கப்பட்டவை**

# குறுக்கெழுத்து போட்டிக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ[1] | டு | வா[2] | ன் | | | | மை[3] | தா[4] |
| கை | | ல | | தொ[5] | | ம[6] | | ர |
| நா[7] | ற் | று | க் | கு | நா[8] | று | | கை |
| ல் | | ந் | | இ[9] | ல | க | ம் | |
| | | த | | உ[10] | க | வை | | |
| த[11] | ம் | ப | ட் | ட | ம் | | மா[12] | சி[13] |
| ள | | ட் | | ன் | | நி[14] | | று |
| ப | | ட | | பா[15] | ச | றை | | வா |
| தி[16] | ரு | ம் | பி | டு | | | ஆ[17] | ணி |




Christy



Nalaas

சத்துமாவு

Christy Group of Companies

A-2, A -3, SIDCO Industrial Estate, Andipalayam,
Tiruchengode - 637 214, Namakkal District. Tamil Nadu. INDIA.

: 04288 288900 info@christygroup.in www.christyfoods.in


Christy Quality Foods (I) Pvt Ltd

44/1, Bhavani By Pass Road,Chithode, Erode - 638102 For Enguires : 0424 2533150, 2533151


Rotary
UNITE FOR GOOD
TEAM UNIQUE
தனித்துவமாக தன்னலமற்ற
UNIVERSAL INSTITUTIONS
Learn - Serve - Lead
Rtn. M.Srinivasan MCA.,
DRFC & District Co ordinator,
Rotary International District - 2982
President 2012 - 2013,
Rotary Club of Idappadi.
Chairman, Universal Institutions, Idappadi.
Mobile :98659 09130
E.mail:universalseenu@gmail.com
UNIVERSAL
Public School
AP. East, Vellandivalasu (Po),
Idappadi - 637105, Salem (Dt).
94889 55580
E.mail : universalschoolidappadi@gmail.com
Matriculation Hr.Sec.School
Universal Nagar, Thangayur (Po),
Idappadi - 637102, Salem (Dt).
75987 79955
E.mail : universalmatricschool@gmail.com
Rotary Club Idappadi
CLUB NO : 83276
Rotary Club Of Idappadi
Rtn.Dr.C.Karthi
M.Com.,(CA),DCA,DJA,D.Astro, D.Litt (USA),PGDPA.
Secretary, Rotary Club of Idappadi.
TEAM UNIQUE
Rtn.P.SakthiSrinivasan B.E., MBA.,
President, Rotary Club of Idappadi.
Secretary, Universal Instititions, Idappadi.



Suvaiyum Manamum
CATERING
SMALL EVENTS
CLUB MEETINGS
HOUSE WARMING
ENGAGEMENT FUNCTION
WEDDING EVENT
PRE & POST WEDDING EVENTS
PARTIES
BIRTHDAY PARTIES
TRAVEL FOOD
PACKED FOOD FOR SCHOOL TRIPS
DAILY FOOD FOR OFFICES
& CORPORATES
EXCLUSIVE TAKEAWAY OUTLET
EXCLUSIVE TAKEAWAY OUTLET FOR
IDIYAPPAM
IDLY
PANIYARAM
CHAPATI
NON VEG STARTERS
VEG GRAVY
NON VEG GRAVY
EGG GRAVY
WE ALSO DO
WHOLESALE SUPPLY OF
IDIYAPPAM AND IDLY
Rtn. BOOBESH PONNUSAMI
PHOENIX
President 2025-26
Rc Salem Phoenix
LIVE COUNTERS ARE AVAILABLE FOR ALL EVENTS
SIGNATURE VEG & NON-VEG CREATIONS - MADE TO PERFECTION
Rotary
ROTARY MEANS
BUSINESS
FELLOWSHIP
அழகாபுரம், சேலம் - 636 016.
85530 10900 | 99409 85594




Owned, Published & Printed by
**DISTRICT SECRETARIAT,**
Uniquez Kids, Exclusive Premium Play & Pre School,
1/1C1, East Colony, National Highway, Komarapalayam - 638 183. Tamilnadu, Mobile : +91 98656 62690

STAY &
Meeting
@ SALEM

SELVAMATHI
FARM RESORTS

Rotary

RMB

# Selvamathi Farm Resorts

✦ Meeting Hall ✦ Luxury Rooms ✦ Swimming Pool ✦ Loving Pets ✦ Natural Studio
✦ Rainshower ✦ Party Lawn ✦ Village huts ✦ 250 Varieties of Trees








Masinaikenpatti (PO), Ayothiyapattanam (Via), Salem-636103.

For Bookings 99525 09812

# Excel GROUP INSTITUTIONS

Approved by AICTE, CoA, NCTE, AYUSH, NCH, NCISM, PCI, TNNMC, NCVT, New Delhi &
Affiliated with Anna University & DoTE, The TN Dr. M.G.R. Medical University, DPH, TNTEU, Chennai, Periyar University, Salem

**ENGINEERING - AUTONOMOUS**

B.E. | B.TECH. - SAFETY & FIRE | AGRI | AERO | BIOMEDICAL | CIVIL | MECH | CSE | EEE
ECE | FOOD TECHNOLOGY | IT | PETROCHEMICAL | ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE
ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
COMPUTER SCIENCE & BUSINESS SYSTEMS | M.E. - ALL BRANCHES
Ph.D. - CSE | ECE | MECH | PHYSICS
M.Tech. - CSE - 5 Years (After+2)

A+ NAAC | NBA | 2634 Counselling Code

**3/2 YEARS DIPLOMA COURSES**

AUTO | MECH | CIVIL | ECE | EEE
COMPUTER ENGINEERING | MEDICAL LAB TECHNOLOGY
TECHNICIAN X-RAY TECHNOLOY

**BUSINESS SCHOOL - AUTONOMOUS**

M.B.A. | M.C.A. - 2 Years (After Degree)
M.B.A. - 5 Years (After+2)

**ARCHITECTURE** — Counselling Code 2667

B.ARCH. | M.ARCH.

**EDUCATION**

B.Ed. | M.Ed.

**COMMERCE & SCIENCE**

B.A. - TAMIL, ENGLISH | B.Com. | B.Com. - CA | B.Com. - AF | B.Com. - PA | B.Com. - IT
B.B.A. | B.Sc. - BIOCHEMISTRY | COMPUTER SCIENCE | MICROBIOLOGY | DATA SCIENCE
VISUAL COMMUNICATION | COSTUME DESIGN & FASHION | TEXTILE & FASHION DESIGNING
ARTIFICIAL INTELLIGENCE & DATA SCIENCE | CYBER SECURITY | INFORMATION TECHNOLOGY
CLINICAL LABORATORY TECHNOLOGY | ARTIFICIAL INTELLIGENCE & MACHINE LEARNING
B.C.A. | M.Com. | M.A. ENGLISH | M.Sc. - MICROBIOLOGY | COMPUTER SCIENCE
TEXTILE & FASHION DESIGNING | M.S.W.

1103 Offers | 1004 Students Placed

**B.H.M.S.**
**B.S.M.S.**
**B.N.Y.S.**
Naturopathy & Yoga - NEET Not Neceesary

PHARM.D.
M.PHARM. Pharmaceutics, Pharmacy Practice
B.PHARM. | D.PHARM.
B.P.T. - PHYSIOTHERAPY
B.O.T. - OCCUPATIONAL THERAPY*
B.Sc. - NURSING (Male / Female)
GNM | HEALTH INSPECTOR
B.Sc. - R.I.T. | M.L.T.

NH-544, Salem - Coimbatore Highway, Komarapalayam - 637 303
+91 98427 13789
excelinstitutions.com

# தி காவிரி கல்வி நிறுவனங்கள்

மேச்சேரி, சேலம் - 636 453.

ACCREDITED WITH GRADE A+ CGPA 3.47 NAAC

**பொறியியல் கல்லூரி (Autonomous)**

**B.E.**
- Biomedical Engineering
- Civil Engineering
- Computer Science Engg.
- Electrical & Electronics Engg.
- Electronics & Communication Engg.
- Mechanical Engineering

Counselling Code 2625

**B.Tech.**
- Artificial Intelligence and Data Science
- Information Technology
- Chemical Engineering
- Agricultural Engineering

**பாலிடெக்னிக் கல்லூரி**

- Medical Laboratory Technology
- Artificial Intelligence & Machine Learning
- Agricultural Engineering
- Fire Technology and Safety
- Chemical Engineering
- Civil Engineering
- Mechanical (T&D) Engg.
- Computer Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronics Engg.
- Electronics & Commun. Engg.

**B.Ed. & M.Ed.**

**கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

B.A. - Tamil - English BCA BBA
B.Com. (CA) B.Com. M.Com.
B.Sc. - Chemistry - Microbiology - Computer Science - Nutrition and Dietetics
M.Sc. - Computer Science (AI & DS) - Microbiology

NURSING COLLEGE
B.Sc. - Nursing | DGNM
PHARMACY COLLEGE
B.Pharm | D.Pharm
PHYSIOTHERAPY COLLEGE
HEALTH SCIENCE
95249 36156

INSHA, 9894640139




Rtn. So. Kannan
District Publication Chair
Cell : 94431 88896



Rtn. M. Shanavas
District Publication Co-Chair
Cell : 98946 40139



Rtn. S. Hemanth
District GML Chair
Cell : 98946 98936